

கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, மக்களவைக் குழு துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தயாநிதிமாறன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (12.06.2024) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 81வது மருத்துவ பட்டப்படிப்பு நிறைவு விழாவில் கலந்து கொண்டு மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, மருத்துவக்கல்லூரி துணை முதல்வர், மருத்துவமனை கண்காணிப்பாளர், நிலைய மருத்துவ அலுவலர், மருத்துவப் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

# ஜூன் 15ல் கோவையில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, ஜூன் 14 -

தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர் என மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில் ஜீன் 15ம் தேதி மாலை மாலை 4 மணிக்கு கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முப்பெரும் விழா நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா.

நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா.

சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என முப்பெரும் விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் இந்தியா கூட்டணியின் அகில இந்திய தலைவர்கள் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற 40 நாடாளு மன்ற உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்க வேண்டுமாய் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

# தேனி வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகக் கலந்து கொள்வீர்!

## தேனி தெற்கு - வடக்கு மாவட்டச் செயலாளர்கள் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. - தங்க.தமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!





தேனி, ஜூன் 14

தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், எம்.பி., ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நாளை (ஜூன் 15ம் தேதி - சனிக்கிழமை) மாலை 4.00மணியளவில் கோயமுத்துார் கொடிசியா மைதானத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா மாபெரும் வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேனி வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக முகவர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. மற்றும் தேனி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன் எம்.பி.ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிக்கை!



தருமபுரி, ஜூன் 14 -

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வருகின்ற ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழநாடு முதல மைச்சர், கழக தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" தருமபுரி கிழக்கு மாவட்ட திமுகழகம் சார்பில் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும். அதுசமயம், இக்கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பு அணிகள் மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### இளையான்குடி தாலுகா

# வல்லக்குளம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம்!

## தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு.

சிவகங்கை, ஜூன் 14 -

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா சூராணம் அருகே உள்ள வல்லக்குளம் கிராமத்தில் அரசின் மக்கள் தொடர்பு திட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது.

திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 7,500 மதிப்பிலான ஆணைகளையும் 18 பயனாளிகளுக்கு 16 வீட்டுமனை பட்டா, 24 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல், மற்றும் வேளாண்மை துறை , சமூக நலத்துறை, கூட்டுற வுத் துறை உட்பட பல்வேறு துறைகளின் சார்பில் நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ .சுப. மதியரசன், கோட்டாட்சியர் விஜயகுமார், ஒன்றிய குழு தலைவர் முனியாண்டி, ஒன்றிய கழகச் செயலாளர் வே.தமிழ்மாறன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் திருமதி சரளா தேவி,சிராஜுதீன், மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் பல்வேறு துறை அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

வட்டாட்சியர் கோபிநாத் நன்றி கூறினார்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# கழக மாணவரணி பொறுப்புகளுக்கு நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!



நெல்லை, ஜூன் 14 -

கழக மாணவரணி பொறுப்பு களுக்கான நேர்காணல் 20.06.2024 காலை 10 மணிக்கு வண்ணார்பேட்டை அப்னா பார்க் ஹோட்டலில் நடைபெற உள்ளது.என நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதுபற்றிய விபரம் வருமாறு.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவரணி ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் வருகின்ற 20.6.2024 வியாழக் கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி வண்ணார்பேட்டை வடக்கு புறவழிச்சாலையில் உள்ள ஹோட்டல் அப்னா பார்க்கில் வைத்து நடைபெற உள்ளது.

எனது தலைமையில் மாநில மாணவரணி இணைச் செயலாளர் எஸ். மோகன் மாநில மாணவரணி துணை செயலாளர்கள் வி.ஜி.கோகுல்,அதிலை செந்தில் ஆகியோர் நேர்காணல் நடத்த உள்ளார்கள். மாணவர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் தலைமைக் கழகம் வழிகாட்டுதலின்படி கழக அமைப்பு ஒவ்வொன்றிற்கும் 10 நபருக்கு குறையாமல் விண்ணப்ப படிவம், மற்றும் நேர்காணல் சுயகுறிப்பு படிவம் ஆகியவற்றை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் நேர்காணலில் கலந்து கொள்ளும் வகையில் கழக ஒன்றிய,நகர,பேரூர் செயலாளர்கள் ஏற்பாடுகள் செய்திட கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:

1.ஒன்றிய,நகர,பேரூர் அமைப்புகளுக்கு 1 அமைப்பாளர், 5 துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

2.துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடி இனத்தவராக இருக்க வேண்டும் மற்றும் மகளிர்ஒருவரும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

3.பட்டப்படிப்பு, பட்டயபடிப்பு, படிப்போரும்(Degree& Diplomo) விண்ணப்பிக்கலாம்

4.பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.

5.கழக உறுப்பினர் உரிமைச் சீட்டு, கல்விச்சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை அல்லது ஆதார் அட்டை நகல் இணைக்கப் பட வேண்டும்.

6. பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்டவேண்டும்.

இவ்வாறு அவர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

ஐந்தாம் ஆண்டு
நினைவு அஞ்சலி

தோற்றம்
10.09.1937

மறைவு
14.06.2019



செம்மண்ணின்
பகுத்தறிவு சுடரே!

பெரியவர் எஸ்.சிவசுப்ரமணியன் M.A.,B.L., அவர்கள்
முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

உங்கள் நினைவுகளுடன்...

சா.சி.சிவசங்கர்
மாவட்ட கழக செயலாளர் – அரியலூர் மாவட்டம்
போக்குவரத்துத் துறை அமைச்சர் – தமிழ்நாடு அரசு

கே.சி.லூயிகதிரவன் DCE.,
மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்

ஆர்.கலியபெருமாள் B.E.,
ஒன்றிய கழக செயலாளர் - ஆண்டிமடம் (தெற்கு)